தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## இன்றைய வேளாண் செய்திகள்

29.09.2012 A.M

| 29th Sep 20012 | இல்லம் தோறும் காய்கறி தோட்டம் ஆழ்வார்குறிச்சியில் துவக்கம் |
|---|---|

ஆழ்வார்குறிச்சி : ஆழ்வார்குறிச்சியில் பரமகல்யாணி கல்லூரி என்எஸ்எஸ் சார்பில் இல்லம் தோறும் காய்கறி தோட்டம் எனும் புதிய திட்டம் துவக்கப்பட்டது.

ஆழ்வார்குறிச்சியில் வாழும் குடும்பங்களுக்கு பூச்சி மருந்து, செயற்கை உரம் பயன்படுத்தப்படாத புதிய காய்கறிகளை அவர்களாகவே உற்பத்தி செய்து கொள்வதற்காக இல்லம் தோறும் ஒரு காய்கறி தோட்டம் என்ற திட்டத்தின் கீழ் இலவசமாக அன்றாடம் பயன்படுத்தப்படும் காய்கறி விதைகளை வழங்கி வீட்டு தோட்டம் அமைப்பதற்கான சிறப்பு முகாம் நடந்தது.

முகாமிற்கு கல்லூரி முதல்வர் ரஞ்சித்சிங் தலைமை வகித்தார். என்எஸ்எஸ் திட்ட அலுவலர்கள் ஆர்.ரஞ்சித், செல்வக்குமார் முன்னிலை வகித்தனர். இல்லம் தோறும் காய்கறி தோட்டம் எனும் திட்டத்தை அறிமுகம் செய்து தோட்டம் அமைக்கும் ஆலோசனை, செய்முறை பயிற்சி ஆகியவற்றை என்எஸ்எஸ் அலுவலர் ரஞ்சித் எடுத்து கூறினார்.

என்எஸ்எஸ் திட்ட அணிகள் 18, 19, 120, 177, 178 ஆகியன சார்பில் திட்ட அலுவலர்கள் முத்துலட்சுமி, சுதாகரன், ராஜகோகிலா மேற்பார்வையில் மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் மாரிமுத்து, ராஜசேகர், பாண்டியராஜா, சிதம்பர பிரியதர்ஷினி, மணிமேகலா ஆகிய குழுவினர் வீடு வீடாக சென்று காய்கறி விதைகளை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக டவுன் பஞ்., தலைவர் முத்தையா கலந்து கொண்டு திட்டத்தை துவக்கி வைத்து காய்கறி விதைகளை வழங்கினார். சுதாகரன் நன்றி கூறினார்.

வீடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் காய்கறி விதைகளை பயன்படுத்தி சிறந்த முறையில் காய்கறி தோட்டம் அமைத்திருக்கும் வீடுகளுக்கு 1 மாதத்திற்கு பின்னர் சிறப்பு பரிசுகள் வழங்கப்படுகிறது.

| 29th Sep 20012 | ஏத்தனுக்கு எப்போதும் மவுசு தான் : காய் விலை குறைவு பழம் விலை உயர்வு |
|---|---|

புதுக்கடை : குமரி மாவட்டத்தில் ஏத்தன்காயின் விலை குறைந்த பின்னரும் ஏத்தன் பழத்தின் விலை குறையாததால் பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர். கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழில்சூழ்ந்த மாவட்டமாகும். இங்கு வானுயர்ந்து நிற்கும் தென்னை மரங்களும், பச்சை பசேலென்று நிற்கும் பயிர்களும், எப்போதும் அசைந்தாடி கொண்டிருக்கும் வாழைகளும் மாவட்டத்தின் அழகை பறைசாற்றும். குறுகிய காலத்தில் வருவாய் ஈட்ட முடியும் என்பதால் குமரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் வாழை விவசாயமே செய்கின்றனர்.பைங்குளத்து ஏலா, கொட்டாரத்து ஏலா, கிள்ளியூர் ஏலா, அஞ்சுகண்ணுகலுங்கு ஏலா, பரசேரி ஏலா மற்றும் சுங்கான்கடை, தோட்டியோடு பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான ஏலாக்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களில் முக்கனிகளில் மூன்றாம் கனிக்கான வாழையை விவசாயிகள் அதிகம் நட்டுள்ளனர். குமரி மாவட்டம் கேரள மாநிலத்தின் அருகில் அமைந்துள்ளதால் இம்மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் ஓணப்பண்டிகை வியாபாரத்தை எதிர்நோக்கி ஏத்தன் வாழை நடுகின்றனர். இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் வீசிய சூறாவளி காற்றில் ஆயிரக்கணக்கான வாழைகள் ஒடிந்து விழந்ததால் விவசாயிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதனால் கடந்த ஜூலை மாதம் ஒவ்வொரு விவசாயியும் லாபம் பார்க்க வேண்டிய நேரத்தில் சோகத்தில் மூழ்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் சூறைகாற்றிற்கு தப்பிய வாழைகளில் இருந்து கிடைத்த ஏத்தன் தார்களுக்கு அதிக விலை கிடைத்தது. ஒரு கிலோ ஏத்தன் பழம் 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடைகளில் தரமான ஒரு ஏத்தன் பழம் 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதேப்போன்று ஏத்தன்காயின் கடுமையான விலை உயர்வால் பேக்கரிகளில் ஒரு கிலோ சிப்ஸ் 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்பொழுது ஒரு கிலோ ஏத்தன்காய் 24 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதன்படி ஏத்தன்பழத்தின் விலையும் குறைய வேண்டும். ஆனால் கடைகளில் தற்போது தரமான ஏத்தன்பழம் பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதைபோல் பேக்கரியில் திடீரென உயர்த்தப்பட்ட சிப்சின் விலை ஏத்தன்காயின் விலை குறைந்த பின்னரும் குறைக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

**29th Sep 20012** | **எலச்சிபாளையத்தில் 37 மி.மீ., மழை பதிவு**

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையத்தில், அதிகபட்சமாக, 37 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது.நாமக்கல் மாவட்டத்தில், நேற்று முன்தினம், பரவலாக பலத்த மழைப்பொழிவு ஏற்பட்டது. அதன்படி, நாமக்கல் மாவட்டம் எலச்சிபாளையத்தில், அதிகபட்சமாக, 37 மி.மீ., கபிலர்மலையில், 5.5 மி.மீ., கொல்லிமலையில், 14 மி.மீ., மல்லசமுத்திரத்தில், 35 மி.மீ., மோகனூரில், 3.5 மி.மீ., நாமக்கல், 8.5 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது. அதுபோல்,

பள்ளிபாளையத்தில், 14 மி.மீ., பரமத்தி, 11 மி.மீ., புதுச்சத்திரத்தி,ல் 7 மி.மீ., ராசிபுரம், 8 மி.மீ., சேந்தமங்கலம், 9.5 மி.மீ., திருச்செங்கோடு, 10 மி.மீ., வெண்ணந்தூரில், 15 மி.மீ., மழையளவு பதிவாகியுள்ளது.

## 29th Sep 20012 | கோபி, ஈரோட்டில்விடிய, விடிய மழை

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் ஈரோட்டில் நேற்று மாலை பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற சில வாரங்களாக கடுமையான வெயில் கொளுத்தியது. வெயில் காரணமாக கோபி சுற்று வட்டாரத்தில் நம்பியூர், குருமந்தூர், கொளப்பலூர் உள்ளிட்ட பகுதியில் மானாவாரியில் பயிரிடப்பட்ட நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் கருகத் துவங்கின. புஞ்சை துறையம்பாளையம், தொட்டகோம்பை உள்ளிட்ட பகுதியில் வனப்பகுதி கடுமையாக வறட்சியானதால் வன விலங்குகள் தண்ணீரின்றி அவதிப்பட்டன.கோபி வட்டாரத்தில் இரு நாட்களுக்கு முன், 25 மில்லி மீட்டர் மழை பெய்ததால் ஓரளவுக்கு விளை நிலங்கள் பயனடைந்தன. நேற்று மாலை, 5 மணியளவில் கோபி சுற்று வட்டாரத்தில் பலத்த மழை பெய்தது. மழை காரணமாக கோபி சுற்று வட்டாரத்தில் குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் நிம்மதியடைந்தனர்.ஈரோடு: ஈரோடு நகரில் நேற்று காலை முதலே வானம் மேகமூட்டமாக இருந்தது. மாலை 4 மணிக்கு நல்ல மழை பெய்ய ஆரம்பித்தது. இரவிலும் தொடர்ந்து மழை பெய்த படி இருந்தது. நகரம் குளுமையான சூழலுக்கு மாறியது.

## 29th Sep 20012 | விதை உற்பத்தியாளர்பயிற்சி முகாம் நடப்பு

கரூர்: தாந்தோணியில் விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது. இதில் வேளாண்துறை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.கரூர் மவட்டம், தாந்தோணி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி முகாம், மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் ரங்கராஜன் தலைமையில் நடந்தது.

முகாமில், விதை சான்று தரத்தின் முக்கியத்துவம் குறித்து, வேளாண்மை துணை இயக்குனர் சௌந்திரம், விதை பண்ணை பதிவு செய்தல் குறித்து, விதை சான்று உதவி இயக்குனர் சேகர், வயலாய்வு, விதைப்பண்ணை தள்ளுபடி மற்றும் சிறப்பு அனுமதி வழங்குதல் குறித்து குளித்தலை விதை சான்று அலுவலர் தியாகராஜன் ஆகியோர் விளக்கம் அளித்து பேசினர்.தோட்டக்கலை துணை இயக்குனர் சதாசிவம், விதை பரிசோதனை நிலைய மேலாண்மை அலுவலர் ரமேஷ், துணை வேளாண்மை இயக்குனர் சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

| 29th Sep 20012 | இன்று உழவர் பாதுகாப்புதிட்டத்தின் சிறப்பு முகாம் |
|---|---|

பெரம்பலூர்: "உழவர் பாதுகாப்பு திட்ட, நான்காம் கட்ட சிறப்பு முகாம் நடக்கிறது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:
தமிழக முதல்வரின் சீரிய திட்டமான உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், குடும்ப தலைவர், குடும்ப உறுப்பினர்களுக்கான கல்வி, திருமணம், முதியோர், ஆதரவற்ற விவசாய கூலித்தொழிலாளர் ஆகிய உதவித்தொகை, உடல் உறுப்பு இழப்பு, இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகிய நிவாரணம், இறுதிச்சடங்கு உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

உழவர் பாதுகாப்புத்திட்டத்தில் சேர தகுதியுள்ள அனைத்து விவசாயிகளிமிருந்து விண்ணப்பங்கள் பெற, அவர்கள் வசிக்கும் கிராமங்களிலேயே சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களில் பட்டாமாறுதல், ரேஷன் கார்டு பெறுவது உள்ளிட்ட கோரிக்கை மனுக்களும் பெறப்படும்.அதன்படி, நேற்று காலை குன்னம் தாலுகா நொச்சிக்குளம், தெரணி கிராமத்திலும், மதியம் சித்தளி (மேற்கு), திம்மூர், பாடாலூர் (மேற்கு) கிராமத்தில் முகாம் நடந்தது. இன்று காலை குன்னம் தாலுகா சில்லக்குடி (தெற்கு) கிராமத்திலும், மதியம் சில்லக்குடி (வடக்கு) கிராமத்திலும் சிறப்பு முகாம் நடக்கிறது. முகாமில் விவசாய பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று பயனடைய வேண்டும்.

| 29th Sep 20012 | டெல்டா' மாவட்ட சம்பா சாகுபடிக்காக ஓமனிலிருந்து 1,300 டன் உரம் வருகை |
|---|---|

கும்பகோணம்: டெல்டா மாவட்ட சம்பா சாகுபடிக்காக ஓமன் நாட்டிலிருந்து, 1,300 டன் பொட்டாஷ் உரம் கும்பகோணத்துக்கு நேற்று முன்தினம் வந்தது.
காவிரி டெல்டா மாவட்டங்களில் நடப்பாண்டு குறுவை சாகுபடி பம்பு செட் மூலம் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து சம்பா சாகுபடி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. டெல்டா மாவட்டங்களில், ஐந்து லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய பணிகள் தீவிரமாக நடக்கிறது. இதற்கு தேவையான அடியுரம், விதை ஆகியவற்றை, தேவையான அளவு விவசாயிகளுக்கு விற்பனை செய்ய, வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய, தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையம் முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. அதன்படி ஓமன் நாட்டிலிருந்து சென்னை துறைமுகத்தின் வழியாக, இந்தியன் பொட்டாஷ் லிமிடெட்

நிறுவனம் மூலம், பொட்டாஷ் உரத்தினை வரவழைத்தனர்.

சென்னை துறைமுகத்திலிருந்து, 21 ரயில் வேகன்களில், 1,300 டன் பொட்டாஷ் உரம், நேற்று முன்தினம் ரயில் மூலம் கொண்டு வரப்பட்டது. கும்பகோணம் ரயில் நிலையத்துக்கு வந்த பொட்டாஷ் உரத்தினை, தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையத்தின் கும்பகோணம் மண்டல மேலாளர் ஜெயக்குமார் மற்றும் அதிகாரிகள் பெற்று கொண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகளில் கும்பகோணம், வலங்கைமான், மயிலாடுதுறை, திருப்பனந்தாள், திருவிடைமருதூர், பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு விற்பனை செய்ய உரத்தினை அனுப்பி வைத்தனர்.
இந்த ஆண்டில் இதுவரை, நான்காயிரம் டன் யூரியாவும், நான்காயிரம் டன் டி.ஏ.பி., உரமும், 2,600 டன் பொட்டாஷ் உரமும், ஓமன் நாட்டிலிருந்து டெல்டா மாவட்ட பாசனத் தேவைக்காக வரவழைக்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**29th Sep 20012** | **தேனியில் காய்கறி மொத்த விற்பனை வளாகம்தேவை**

தேனி:தேனியில் காய்கறி மொத்த விற்பனை வணிக வளாகம் இல்லாததால், விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகளுக்கு விலை கிடைப்பதில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் விலை வீழ்ச்சியாலும், தவித்து வருகின்றனர். தேனி மாவட்டத்தில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடும் வறட்சி நிலவுகிறது. பருவமழை முற்றிலும் பொய்த்து விட்டது. நிலத்தடி நீர் மட்டம் 500 அடிக்கும் கீழே சென்று விட்டது. மாவட்டத்தில் எட்டு ஊராட்சி ஒன்றியங்களும் கருமை பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. கிடைக்கும் நீரைக் கொண்டு விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். கஷ்டப்பட்டு விளைவிக்கும் பொருட்களை சந்தைக்கு கொண்டு சென்றால் விலை கிடைப்பதில்லை. வியாபாரிகள் நிர்ணயிக்கும் குறைந்த விலைக்கு விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. தக்காளிக்கு கிலோ ஒரு ரூபாய், 2 ரூபாய் விலை நிர்ணயம் செய்கின்றனர்.வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கின்றனர். இதனால் விவசாயிகள் நஷ்டமடைகின்றனர். இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் பார்க்கின்றனர். இந்நிலையை மாற்ற ஒட்டன்சத்திரம், சேலம், விழுப்புரத்தில் உள்ளது போல், பேக்கிங் ஹவுஸ், குளிர்சாதன கிட்டங்கி, தரம்பிரிக்கும் குடோன் வசதியுடன் காய்கறி மொத்த விற்பனைவணிக வளாகம் அமைத்து, விவசாயிகளே அரசு அதிகாரிகள் மூலம் நேரடியாக விற்பனை செய்யும் நடைமுறையை கொண்டு வர வேண்டும். மதுரையில் நெல் மொத்த விற்பனை வணிக வளாகம் உள்ளது. பட்டுக்கோட்டையில் தென்னை விற்பனை வணிக வளாகம் உள்ளது. ஒட்டன்சத்திரத்தில் விவசாய விளைபொருள் விற்பனை பேரங்காடி கட்டப்பட்டுள்ளது. தேனி மாவட்ட

விவசாயிகளுக்கு வாழ்வளிக்க அரசுகாய்கறி விற்பனை வணிக வளாகத்தை தேனியில் கட்ட வேண்டும்.

**29th Sep 20012** | **மாடுகளுக்கு தடுப்பு ஊசிகாணை நோய் தடுக்க நடவடிக்கை**

ஸ்ரீவில்லிபுத்தூர்: காணை நோய் பரவாமல் தடுக்க, கால்நடைத்துறை சார்பில், 3 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.மாடுகளுக்கு மழை காலங்களில் வாய், கால்களில் காணை நோய் ஏற்படும். இந்நோயால், மாடுகள் உணவு சாப்பிட முடியாமலும், நிற்க முடியாமலும் சோர்ந்து போகும். மாடுகளில் பால் உற்பத்தி குறைவதோடு, சினை பிடிக்காமலும் போகும் வாய்ப்புள்ளது.இதை தவிர்க்க, கால்நடைத்துறை சார்பில், வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக, காணை நோய் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.மாவட்டத்தில் இந்தாண்டு 3 லட்சம் மாடுகளுக்கு, ஊசி போடப்பட உள்ளது. டாக்டர், கால்நடை ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் என, மூன்று பேர் கொண்ட குழுவினர் ,கிராமங்கள் தோறும் முகாம் நடத்தி ,கடந்த ஒரு வாரமாக ஊசி போட்டு வருகின்றனர். மாவட்டத்தில் 48 குழுக்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது.கால்நடை நோய்புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் வரத நாராயணன்,"" செப்.,15ல் துவங்கிய இம்முகாம், ஒரு மாதம் நடக்கும். மாடுகளுக்கு இலவசமாக போடப்படும் தடுப்பூசிகளை போட்டு கொள்ள வேண்டும்," என்றார்.

**29th Sep 20012** | **உரக்கடைகளில் அதிக விலைக்கு விற்பனை**

சேலம்: "அசோலா பயிர் செய்ய, கடைகளில் சூப்பர் பாஸ்பேட் கேட்டபோது, ஒரு கிலோ, 620 ரூபாய் என்கின்றனர். எம்.ஆர்.பி., வெறும், 180 ரூபாய்தான். எனவே, உரக் கடைகளில் அதிகாரிகள் ஆய்வு செய்து, சரியான விலையில் விற்பனை செய்கின்றனரா என கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.சேலம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் செங்கோட்டுவேல், டி.ஆர்.ஓ., பிரசன்ன வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:விவசாயி சண்முகம்: பனமரத்துப்பட்டி பகுதியில், கலர் மண் மாற்ற, வேளாண்மை துறை மூலம், கடந்த ஆண்டு, 100 டன் ஜிப்சம் மானிய விலையில் வழங்கப்பட்டது. கலர் மண் மாற மூன்று ஆண்டு பிடிக்கும் என்பதால், தொடர்ந்து மானிய விலையில், ஜிப்சம் அளிக்க வேண்டும்.வேளாண்மை இணை இயக்குனர் செங்கோட்டுவேல்: இந்த திட்டம், தற்போது இல்லை என்பதால், மானிய விலையில் ஜிப்சம் அளிக்க முடியாது. இதுசம்பந்தமாக, அரசுக்கு பரிந்துரை செய்து, நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயி சண்முகம்: நிலத்தடி நீர் சேமிப்பு திட்டத்துக்காக, விவசாயிகளுக்கு, 4,000

ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. அதனை, அதிகாரிகள் திரும்ப பெற முடிவு செய்தள்ளனர். இந்த தொகையை, விவசாயிகளிடம் வசூலிக்க கூடாது.கலெக்டர் மகரபூஷணம்: நிலத்தடி நீர் சேமிப்புக்கான நிதி இலவசமாகவோ, மானியத்திலோ அளிக்க வில்லை. திரும்ப அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்ட நிதி என்பதால், அதிகாரிகள், பணத்தை விவசாயிகளிடம் திரும்ப வாங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.விவசாயி ஜெயராமன்: உத்தமசோழபுரத்தில், காய்கறி மார்க்கெட் துவங்க உள்கட்டமைப்பு வசதிகளுடன் உள்ளது. உடனடியாக, காய்கறி மார்க்கெட் துவங்க, விவசாயிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும்.வேளாண்மை இணை இயக்குனர் செங்கோட்டுவேல்: இதுசம்பந்தமாக அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசிடம் இருந்து முறையான அனுமதி கிடைத்ததும், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயி கோவிந்தசாமி : தென்மேற்கு பருவமழை பொய்த்து விட்டது. வடகிழக்கு பருவ மழை பெய்யுமா என சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு, மாற்று தொழில் செய்ய, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று கொடுக்க வேண்டும்.

மத்திய கூட்டுறவு வங்கி மூலம் கடன் அளிக்க மறுக்கின்றனர். எனவே, மாற்று தொழில் துவங்க, வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத் தர வேண்டும்.கலெக்டர் மகரபூஷணம்: தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயி ராமு: அசோலா பயிர் செய்ய சூப்பர் பாஸ்பேட் இட வேண்டும் என, பயிற்சி அளித்த போது தெரிவித்தனர். நான், அசோலா பயிர் செய்திட கடைகளில் சூப்பர் பாஸ்பேட் கேட்ட போது, ஒரு கிலோ, 620 ரூபாய் என்கின்றனர்.
எம்.ஆர்.பி., வெறும், 180 ரூபாய் போடப்பட்டுள்ளது. எந்த கடையிலும் சூப்பர் பாஸ்பேட் இல்லை என்று கூறுகின்றனர். உரக் கடைகளில் அதிகாரிகள் ஆய்வு செய்து, சரியான விலையில் விற்பனை செய்கின்றனரா என கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.வேளாண்மை இணை இயக்குனர் செங்கோட்டுவேல்: இதுகுறித்து தகுந்த விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

## 29th Sep 20012 | அடிக்கடி மின்தடையால் விவசாயம் கடும்பாதிப்பு: விவசாயிகள் குமுறல்

திண்டுக்கல்:அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், விவசாயமே பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கொதிப்படைந்தனர். திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. விவசாய இணை இயக்குனர் சம்பத், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் குமரேசன், தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகர் உட்பட அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.விவசாயிகள் கூறியதாவது:குளத்தில் தூர் வாரும் போது, விவசாயிகள் மண் அள்ளுவதற்கு பணம் கேட்கின்றனர். பட்டா தருவதில் குளறுபடி

நடக்கிறது. ஒரு இடத்திற்கு இரண்டு பட்டா தருகிறார்கள். விவசாயத்திற்கு ஒரு நாளைக்கு 3 மணிநேரம் மும்முனை மின்சாரம் தருவதாக கூறுகிறார்கள். ஆனால் ஒரு மணிநேரம் மட்டுமே மின்சாரம் வருகிறது. சில நாட்கள் நாள் முழுவதும் வருவதில்லை. மின்மோட்டார் காயில் பழுதாகி, பயனற்றதாகி விடுகிறது. மின்வாரியத்தின் குளறுபடியான மின்வினியோகத்தால், விவசாயம்கடும்பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. டிரன்ஸ்பார்மர் பழுதுகளை அதிகாரிகள் சரி செய்வதில்லை. வங்கிகளில் கடன் தராமல் இழுத்தடிக்கிறார்கள். கால்நடைகளுக்கு தீவணங்கள் கிடைப்பதில்லை, என்றனர்.கலெக்டர் பேசியதாவது: குளத்தில் விவசாயிகள் மண் அள்ளினால், பணம் வாங்ககூடாது. அதே நேரத்தில்வர்த்தக ரீதியாக மணல், பொக்லைன் வைத்து அள்ளினால், பணம் வசூலிக்கப்படும். பட்டா அளிப்பதில் தாசில்தார்கள் தனி கவனம் செலுத்த வேண்டும், என்றார்.மின்வாரிய கண்காணிப்பாளர் குமரேசன்நாங்கள் மூன்று மணிநேரம் மின்சாரம் வழங்குகிறோம். தேவைக்கு ஏற்றது போல், மின்உற்பத்தி இல்லை, இதற்கு எங்களிடம் தீர்வு இல்லை, என்றார்.கால்நடை இணை இயக்குனர் மொகைதீன் அப்துல்காதர் ஜெய்லானி: கால்நடைகளுக்கு தேவையான தீவண புல் 750 ஏக்கரில் பயரிடுவதற்கு அரசு மானியம் வழங்கியுள்ளது.ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஏக்கர் வீதம் பயிரிட்டு, ரூ.12 ஆயிரம் வரை மானியம் பெறலாம்என்றார்.

**29th Sep 20012** | **விலை குறைவால் விரக்தி சாலையில் வீசப்படும் தக்காளிகள்**

பெ.நா.பாளையம் : தக்காளி விலை வீழ்ச்சியடைந்ததால், விரக்தி அடைந்த விவசாயிகள், அதை சாலையோரம் வீசிச் சென்றனர்.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டி வட்டாரத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் முள்ளங்கி, கத்திரி, வெண்டை, தக்காளி உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் தக்காளியை பயிரிடலாம், அறுவடை செய்த பின், ஓரளவு லாபம் கிடைக்கும் என்பதால், பெரும்பாலான விவசாயிகள், தங்கள் தோட்டத்தில் பயிர் செய்வது வழக்கம். ஆனால், கடந்த சில நாட்களாக, காய்கறி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகமாகி விட்டதால், அவற்றின் விலை மிகவும் குறைந்து விட்டது.

பெரியநாயக்கன்பாளையம், துடியலூர், வீரபாண்டியில் கிலோ ஒன்று மூன்று ரூபாயில் இருந்து ஐந்து ரூபாய்க்கு, கடைகளில் விற்பனையாகிறது. காய்கறி மொத்த வியாபாரிகளிடம் விவசாயிகள், கூடை ஒன்று 15 ரூபாயில் இருந்து 20 ரூபாய் என்ற அளவுக்கே, விற்பனை செய்ய முடிகிறது. மார்க்கெட்டுக்கு தக்காளியை கொண்டு வந்து, உரிய விலை கிடைக்காத விவசாயிகள், அதை, பெரியநாயக்கன்பாளையத்தில், சாலையோரம் வீசிச் செல்லும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது:

காட்டு விலங்குகளால், தக்காளி பயிருக்கு பெரும் சேதம் ஏற்படுகிறது. யானைகள் புகுந்து மிதிப்பதால், தக்காளிச் செடிகள் அனைத்தும், வீணாகி விடுகின்றன. குறிப்பாக, மயில்கள் கூட்ட, கூட்டமாக வந்து, தக்காளியை கொத்தி தின்பதால், தக்காளிப் பழங்கள் வீணாகி விடுகின்றன. வனத்துறை சட்டப்படி, மயில் பாதுகாக்கப்பட்ட பறவைகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், அதை விரட்டவோ அல்லது வேறு நடவடிக்கை எடுக்க முடியாத சூழல் உள்ளது. இதனால், தக்காளி ஓரளவு காயாக இருக்கும் போது, பறித்து வைக்கவேண்டிய நிலை உள்ளது. மார்க்கெட்களில் விற்பனை செய்யும் போது, எடை குறைந்து, லாபம் பாதிக்கிறது. இப்பிரச்னை தீர, பெரியநாயக்கன்பாளையத்தில், உழவர் சந்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தவிர, அதிகளவு காய்கறி விளையும் போது, அதை சேமித்து வைக்க, குளிர்பதன கிடங்கு பெரியநாயக்கன்பாளையத்தில் அமைக்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

## 29th Sep 20012 | அன்னூரில் சுழல் காற்றால் 1.72 லட்சம் வாழைகள் நாசம்

அன்னூர் : அன்னூர் வட்டாரத்தில், கடந்த 26ம் தேதி வீசிய சூறாவளியால் ஏற்பட்ட சேதம் குறித்து, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் நடத்திய கணக்கெடுப்பில், "ஒரு லட்சத்து 72 ஆயிரம் வாழை மரங்கள் நாசமானது,' தெரிய வந்தது. அன்னூர் வட்டாரத்தில், மழையுடன் சுழல் காற்றும், சுழன்று சுழன்று அடித்தது. சுழல்காற்றின் வேகத்தை தாங்கமுடியாமல், பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நேந்திரன் ரக வாழை மரங்கள் முறிந்து விழுந்து நாசமானது. பாதிப்பு குறித்து அறிக்கை தர, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியது. கிராம நிர்வாக அலுவலர்களும், தோட்டக்கலைத்துறை அலுவலர்களும், சேதம் குறித்து கணக்கெடுத்தனர். பாதிக்கப்பட்ட வாழைத் தோட்டங்களில், எம்.எல்.ஏ., கருப்பசாமி, மாவட்ட கவுன்சிலர் அமுல் கந்தசாமி, சேர்மன் கண்ணம்மாள் மற்றும் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அ.மேட்டுப்பாளையத்தில் ஆய்வு செய்த போது, ஊராட்சி தலைவர் ஜெயஸ்ரீநாகராஜன் மற்றும் விவசாயிகள், கூறுகையில்,""ஒரு ஏக்கருக்கு, 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருந்தோம். முறிந்து விழுந்த பிஞ்சு வாழைத்தார்களை என்ன செய்வது என்றே தெரியவில்லை. வங்கிகளில், பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த, மூன்று ஆண்டுகள் கூடுதலாக அவகாசம் தர வேண்டும். ஒரு வாழைக்கு 50 ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும்,' என் றனர்.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜஸ்ரீ பேசுகையில்,""அன்னூர் வட்டாரத்தில், 10

ஊராட்சி மற்றும் ஒரு பேரூராட்சியில் வாழை மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. சேதம் குறித்து கணக்கெடுக்கப்பட்டது. அதிகபட்சமாக பிள்ளையப்பம்பாளையம் ஊராட்சியில் 46 ஆயிரத்து 720 வாழைகளும், அ.மேட்டுப்பாளையத்தில் 38 ஆயிரத்து 350, பசூரில் 30 ஆயிரத்து 756, வடக்கலூரில் 20 ஆயிரத்து 700 என, மொத்தம் ஒரு லட்சத்து 72 வாழை மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் ஊராட்சி கிராம நிர்வாக அலுவலரிடம் சேதம் குறித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்," என்றார். ஆய்வில் வேளாண் உதவி இயக்குனர், கிருஷ்ணராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர

29th Sep 20012

## வெளிச்சந்தைக்கு 40 லட்சம் டன் சர்க்கரை



புதுடில்லி:பண்டிகை காலத்தை முன்னிட்டு, வெளிச்சந்தைக்கு 40 லட்சம் டன் சர்க்கரையை விடுவிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.சர்க்கரை ஆலைகள், வெளிச்சந்தைக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட சர்க்கரையில், குறைந்தபட்சம், 45 சதவீதத்தை, அக்டோபர் அல்லது நவம்பர் மாதங்களில் விற்க வேண்டும்.கடந்த சில மாதங்களாக, சர்க்கரையின் விலை உயர்ந்து வருகிறது. சென்ற ஆகஸ்ட் மாதம் முதல், சர்க்கரை விலை, கிலோவுக்கு, மூன்று ரூபாய் உயர்ந்து, 40 ரூபாயாக அதிகரித்துள்ளது.
சர்க்கரையை விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், மத்திய அரசு, நடப்பாண்டு ஜூலை முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில், வெளிச்சந்தை விற்பனைக்கு, 45 லட்சம் டன் சர்க்கரையை ஒதுக்கியது. பொது வினியோகத் திட்டத்திற்காக, அடுத்த இரண்டு மாதங்களில், சர்க்கரை ஆலைகள், 3.96 லட்சம் டன் சர்க்கரையை வழங்க உள்ளன.

அண்மையில், மத்திய உணவு அமைச்சகம், பொது வினியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சர்க்கரை விலையை உயர்த்த திட்டமிட்டிருந்தது. ஆனால், பண்டிகை காலம் என்பதால், விலை உயர்வு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.வரும் அக்டோபரில் துவங்கும், 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு பருவத்தின் உற்பத்தியை விட, 6.4 சதவீதம் குறைந்து, 2.45 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 29.09.2012 A.M

29th Sep 20012 | நெல் கொள்முதல் ஆதார விலை அதிகரிப்பு: ஜெயலலிதா



சென்னை, செப். 28: தமிழகத்தில் நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

அதன்படி, இனி சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,300-ம், சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,350-ம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு அறிவிக்கும்போதெல்லாம், விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம், கூடுதல் ஆதார விலையை தமிழக அரசு வழங்கி வருகிறது.

அந்த வகையில், வரும் 1-ம் தேதி முதல் 2013 செப்டம்பர் 30-ம் தேதி வரையிலான காரீப் பருவத்துக்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

இதன்படி, சாதாரண நெல்லுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.1,250 என்றும், சன்னரக நெல்லுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.1,280 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன்களைக் காக்கும் வகையில், சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.1,250 உடன் கூடுதலாக

தமிழக அரசின் சார்பில் ரூ.50 வழங்கவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.1,280 உடன் கூடுதலாக ரூ.70 வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். அதன்படி, சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,300 வழங்கவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,350 வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

கூடுதல் நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறக்க உத்தரவு: காவிரி பாசனப் பகுதிகளில், அதிக அளவில் நெல் விளையும் பகுதிகளில், தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு அனுமதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

காவிரி பாசனப் பகுதி அல்லாத இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் திறக்க அனுமதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.09.2012 A.M

29th Sep 20012

## தர்மபுரியில் 45 மிமீ மழை

தர்மபுரி, : தர்மபுரியில் நேற்று முன்தினம் இரவு திடீரென கனமழை பெய்தது. இதில் அதிகபட்சமாக 45 மிமீ மழை பதிவானது.

கடந்த சில நாட்களுக்கு முன் தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் விவசாயப் பணிகளை துவங்கி வந்தனர். தொடர்ந்து மீண்டும் வெயில் வாட்டி வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சுமார் 8 மணியளவில் திடீரென கனமழை பெய்தது. இம்மழை சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது. மாவட்டம் முழுவதுமே பரவலாக மழை பெய்தது. அதன்படி தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெய்த மழையின் அளவு வருமாறு: தர்மபுரி 45 மிமீ, அரூர் 7.2 மிமீ, பாப்பிரெட்டிப்பட்டி 31 மிமீ, பாலக்கோடு 3 மிமீ, பென்னாகரம் 3 மிமீ, ஒகேனக்கல் 5.2 மிமீ, மாரண்டஹள்ளி 7 மிமீ, இலக்கியம்பட்டி 38 மிமீ.

29th Sep 20012

## பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் மாதந்தோறும் ரூ.20,000 லாபம் மாவட்ட பயிற்சி வகுப்பில் தகவல்

நீடாமங்கலம், : பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் மாதந்தோறும் ரூ.20,000 லாபம் ஈட்டலாம் என்று மாவட்ட பயிற்சி வகுப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் குறித்து மாவட்ட அளவிலான பயிற்சி நடந்தது. பயிற்சியை துவங்கி வைத்து திருவாரூர் கலெக்டர் நடராஜன் பேசுகை யில்,

'நமது மாவட்டத்தில் இரண்டரை லட்சம் விவசாய குடும்பங்கள் உள்ளன. விவசாயத்தையே நம்பியிருக்கும் இவர்களின் வருமானம் வாழ்க்கைக்கு போதுமானதாக இல்லை. பட்டுப்புழு

வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் மானியத்துடன் கடன் வசதி, பயிற்சிகள், முக்கிய இடுபொருள்கள் மற்றும் சுற்றுலா என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. முழுமையான ஈடுபாடு மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றை பட்டுப்புழு வளர்ப்பில் செலுத்தினால் ஏக்கருக்கு மாதந்தோறும் ரூ.20 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்' என்றார்.

சேலம் மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய முதுநிலை விஞ்ஞானி பாலகிருஷ்ணன் பேசுகையில், 'தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு முகாம் நடத்தி வருகிறோம்' என்றார்.

திருச்சி மண்டல பட்டு வளர்ச்சிதுறை துணை இய க்குனர் பன்னீர்செல்வம் பேசுகையில், 'பட்டு வளர்ப்பை தொழிலாக மேற்கொள்வதற்கு தமிழக அரசு சொட்டு நீர் பாசனம் அமைத்து மல்பெரி செடி வளர்க்க, வளர்ப்பு கூடம் அமைக்க மானிய தொகையை அதிகரித்துள்ளது' என்றார்.

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.செங்குட்டுவன் பேசுகையில், 'தமிழக அர சின் விவசாய உற்பத்தியை 2 மடங்காக்கி வருமானத்தை 3 மடங்காக அதிகரிக்க வேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்றதாக பட்டு வளர்ப்புத் தொழில் அமையும்' என்றார். முன்ன தாக விஞ்ஞானி ராஜ்குமார் வரவேற்றார். ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

29th Sep 20012

## கரூரில் பலத்த மழை மக்கள் சந்தோஷம்

கரூர், : கரூரில் மே மாதத்திற்கு பின் நேற்று பலத்த மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் மே மாதத்தில் பலத்த மழை பெய்தது. அதன்பின் வெயில் கொளுத்தியது. அவ்வப்போது லேசான அளவில் மட்டுமே மழைபொழிவு இருந்தது. ஆகஸ்ட், செப்டம்பர் மழை பெய்வதற்கு பதிலாக வெயில் வாட்டி எடுத்தது. இந்நிலையில் கடந்த 27ம்தேதி பரவலாக மழை பெய்தது.

நேற்றும் நல்ல பொழிவு பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக க.,பரமத்தி வட்டாரத்தில் அதிக மழை பதிவாகியிருக்கிறது. க.பரமத்தி 38.6 மிமீ, அரவக்குறிச்சி 7.5, கடவூர் 12.1, அணைப்பாளையம் 8.2, மயிலம்பட்டி, பாலவிடுதி 17.1, கிருஷ்ணராயபுரம் 10, மாயனூர் 10 பஞ்சப்பட்டி 8.7, கரூர் 22, குளித்தலை 9.1, தோகமலை 6 மிமீ. தொடர்ந்து மழை பெய்தால் சாகுபடி பணிகளை நம்பிக்கையோடு மேற்கொள்ளலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

29th Sep 20012

## குளித்தலையில் காற்றுடன் மழை

குளித்தலை, : குளித்தலை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பலத்த சூறாவளி காற்றுடன் மிதமான மழை பெய்தது.

குளித்தலை பகுதியில் சில தினங்களாக வெயிலின் உக்கிரம் மற்றும் தொடர் மின்தடையால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வந்தனர். இந்நிலையில் நேற்று இரவு 7 மணிக்கு பலத்த சூறாவளி காற்று வீசியதுடன் மிதமான மழை பெய்தது.

1 மணி நேரம் நீடித்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மழையால் குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் சந்தோஷமடைந்தனர்.

இதேபோல விவசாய பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளையும் மழை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

29th Sep 20012

## க.பரமத்தியில் பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

க.பரமத்தி, : க.பரமத்தி பகுதியில் 2 மணி நேரத்திற்கும் மேல் பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை வெயில் வாட்டி எடுத்தது.

இந்நிலை யில் மாலையில் திடீரென குளிர்ந்த காற்று வீசியதோடு, 2 மணிநேரம் பலத்த மழை பெய்தது. திடீரென பெய்த மழை யால் க.பரமத்தியில் இருந்து பல்வேறு கிராமங்களுக்கு செல்லும் சாலைக ளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கிய தால் சைக்கிள் மற்றும் டூவீ லரில் சென்ற பலரும் கடும் சிரமத்திற்கு ஆளாகி னர்.

தற்போது பெய்த மழை யால் சோளம், கம்பு உள்ளி ட்ட தீவன பயிர்கள் செழித்து வளர பேருதவியாக இருக்கும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

29th Sep 20012

## நாகை மாவட்டத்தில் லட்சம் விவசாயிகளுக்கு ரூ.604 கோடி பயிர் கடன் போதிய உரம் கையிருப்பு

நாகை, : நாகை மாவட்டத்தில் 1,00,888 விவசாயிகளுக்கு ரூ.604.04 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கலெக்டர் முனுசாமி தெரிவித்தார்.

நாகை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. தலைமை வகித்து கலெக்டர் முனுசாமி பேசியதாவது:

மாவட்டத்தில் இயல் பான மழை அளவு 1182.20 மி.மீ. நடப்பாண்டு செப்டம்பர் வரை பெய்ய வேண்டிய மழை அளவு 431.7 மி.மீ. இதுவரை 219.40 மி.மீ. பெய்துள்ளது. இந்த மாதத்தில் பெய்த 98.87 மி.மீ. மழை கோடை உழவுக்கு உகந்ததாக இருந்தது. சம்பா பருவத்திற்கு இதுவரை 14,451 எக்டேரில் நெல் நடவு மற்றும் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. மயிலாடுதுறை கோட்டத்தில் இறவையில் வடிமுனை குழாய்நீர் பாசனம் மூலம் 1,736 எக்டேரில் சம்பா நாற்றங்களால் விதைப்பு செய்யப்பட்டு நடவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களில் யூரியா 2,945 டன், டிஏபி 9,153 டன், பொட் டாஷ் 1,651 டன், காம்ப்ளக்ஸ் உரம் 2,733 டன் இருப்பு உள்ளது. சம்பா பருவத்திற்கு தேவையான சிஆர் 1009, ஏபிடி 38, ஏடிடி 39, ஏடிடி 46, பிபிடி 5204 போன்ற ரக வகைகள் வேளாண் விரி வாக்க மையங்கள், தொட க்க வேளாண் கூட்டுறவு மையங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பயிர் கடனை பொறுத்தவரை கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகள் மூலமாக 1,00,888 விவசாயிகளுக்கு ரூ.604.04 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கலெக்டர் முனுசாமி பேசினார்.

ஓ.எஸ்.மணியன் எம்பி, டிஆர்ஓ ஆசியா மரியம், வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

29th Sep 20012

## நெல்லுக்கு மத்திய அரசு தரும் விலையுடன் ரூ.50 கூடுதலாக வழங்கப்படும்



சென்னை: மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையைவிட குவிண்டால் ஒன்றிற்கு சாதாரண நெல்லுக்கு ரூ.50ம், சன்ன ரக நெல்லுக்கு ரூ.70ம் கூடுதலாக தமிழக அரசு வழங்கும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.1.10.12 முதல் 30.9.13 வரையிலான காரீப் பருவத்திற்கு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதன்படி, சாதாரண நெல்லுக்கான விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,250 என்றும், சன்னரக நெல்லுக்கான விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,280 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன்களை காக்கும் வகையில், சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,250 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் ரூ.50 வழங்கவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,280 ரூபாயுடன் கூடுதலாக ரூ.70 வழங்கப்படும்.இது மட்டுமல்லாமல், காவிரி பாசன பகுதிகளில், அதிக அளவில் நெல் விளையும் பகுதிகளில், தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். காவிரி பாசன பகுதி அல்லாத இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் திறக்க அனுமதி வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா நேற்று தெரிவித்துள்ளார்.

29th Sep 20012

## தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க ரூ.100 கோடி ஒதுக்கீடு



குன்னூர் : தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு 75 சதவீதம், உற்பத்தியாளர்கள் 25 சதவீதம் பங்களிப்பில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கத்தின் 119ம் ஆண்டு கருத்தரங்கு குன்னூரில் நேற்று நடந்தது. இதில் தோட்டத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் புதிய ரக மருந்து, உர வகைகள் தொடர்பான சிறப்பு கண்காட்சி நடைபெற்றது.

மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சர் ஜோதிர் ஆதித்யா சிந்தியா பேசியதாவது: தோட்ட தொழிலாளர் பற்றாக்குறையால், வெளிநாடுகளிலிருந்து விவசாய இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் வரி விலக்கு அளிப்பது தொடர்பாக வரும் பட்ஜெட் கூட்டத்தில் விவாதித்து நடவடிக்கை எடுக்கப்படும். பெரும்பாலான இடங்களில் முதிர்ந்த தேயிலை செடிகள் அதிகளவில் உள்ளதால் மகசூல் குறைந்து வருகிறது. முதிர்ச்சியடைந்த செடிகளை அகற்றி மறு நடவு செய்ய வேண்டும். இதற்கு மத்திய அரசும் உதவி செய்ய தயாராக உள்ளது.

சிறு தேயிலை விவசாயிகள் நலன் கருதி ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் தனி இயக்குனரகம் அமைக்கப்படவுள்ளது. இதனால் தேயிலை விவசாயிகள் பிரச்னை அவ்வப்போது தீர்க்கப்பட்டு மத்திய அரசின் மானிய உதவிகள் தடையின்றி கிடைக்கும். ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் கஜகஸ்தான், அமெரிக்கா, எகிப்து, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முதல் கட்டமாக ரூ.6.5 கோடி மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு 75 சதவீதமும், உற்பத்தியாளர்கள் 25 சதவீதம் பங்களிப்பில் ஏற்றுமதியை அதிகரிக்க ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்படும். நாடு முழுவதும் 50 லட்சத்துக்குக்கும் மேற்பட்டோர் தேயிலைத் தொழிலில் பணியாற்றுகின்றனர் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 29.09.2012 A.M

| 29th Sep 20012 | சாதாரண ரகத்திற்கு ரூ.50, சன்னரகத்திற்கு ரூ.70 அதிகரி பு<br>நெல் கொள்முதல் விலை உயர்வு<br>ஜெயலலிதா உத்தரவு |
|---|---|

நெல்லுக்கு மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதார விலை டன் சாதாரண நெல் குவி டாலுக்கு ரூ.50–ம், சன்னரக நெல்லுக்கு ரூ.70–ம் உயர்த்தி வழங்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்படி, சாதாரண நெல் குவி டால் ஒன்றிற்கு ரூ.1,300–ம், சன்னரக நெல் குவி டால் ஒன்றிற்கு ரூ.1,350–ம் கிடைக்கும்.

இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிரு பதாவது–

மத்திய அரசின் விலை

நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு அறிவிக்கும் போதெல்லாம், விவசாயிகளை ஊக்குவிக்கும் வ ணம், கூடுதல் ஆதார விலையை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

அந்த வகையில், 1.10.2012 முதல் 30.9.2013 வரையிலான காரீ பருவத்திற்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதன்படி, சாதாரண நெல்லுக்கான விலை குவி டால் ஒன்றுக்கு ரூ.1,250 என்றும், சன்னரக நெல்லுக்கான விலை குவி டால் ஒன்றுக்கு ரூ.1,280 என்றும் நிர்ணயம் செய்ய பட்டுள்ளது.

கொள்முதல் விலை உயர்வு

இதனையடுத்து, நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன்களைக் காக்கும் வகையில், சாதாரண நெல்லுக்கு குவி டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்க பட்டுள்ள 1,250 ரூபா டன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் ரூ.50 வழங்கவும், சன்னரக நெல்லுக்கு குவி டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்க பட்டுள்ள 1,280 ரூபா டன் கூடுதலாக ரூ.70 ரூபாய் வழங்கவும், ஆக மொத்தம் சாதாரண நெல்லுக்கு குவி டால் ஒன்றிற்கு ரூ.1,300 வழங்கவும், சன்னரக நெல்லுக்கு குவி டால் ஒன்றிற்கு ரூ.1,350 வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

இதுமட்டுமல்லாமல், காவிரி பாசன பகுதிகளில், அதிக அளவில் நெல் விளை ம் பகுதிகளில்,

தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுமதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

காவிரி பாசன பகுதி அல்லாத இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் திறக்க அனுமதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை விவசாயிகளுக்கு ஊக்கத்தை ம், உற்சாகத்தை ம் ஏற்படுத்தும்.

இவ்வாறு அறிக்கையில் கூற பட்டுள்ளது.